இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 119 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 23 – செவ்வாய்க்கிழமை 09 டிசம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 119 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 23 - Tuesday 09 December 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## எத்தனை எதிரிகள் வந்தாலும்; எத்தனை அணிகள் செயல்பட்டாலும்

# தமிழ்நாட்டில் தி.மு.க.வே மீண்டும் ஆட்சி அமைக்கும்!



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (8.12.2025) முகாம் அலுவலகத்திலிருந்து, "என் வாக்குச் சாவடி – வெற்றி வாக்குச் சாவடி" என்ற தலைப்பில் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

**சென்னை, டிச, 9-**

**"எத்தனை எதிரிகள் வந்தாலும் எத்தனை அணிகள் செயல்பட்டாலும் தமிழ்நாட்டில் தி.மு.கழகமே மீண்டும் ஆட்சி அமைக்கும்" என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலமாக நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போது திட்டவட்டமாகக் கூறினார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (8.12.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக "என் வாக்குச் சாவடி – வெற்றி வாக்குச் சாவடி" என்ற தலைப்பில் நடைபெற்ற கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் உயரிய நோக்குடன், பசி, உறக்கம், குடும்பம் ஆகியவற்றைத் துறந்து S.I.R. பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள், வாழ்த்துகள்.

நாம் இவ்வளவு கடினப்பட்டு இருந்தாலும் பாதி கிணறு தான் கடந்துள்ளோம். வெரிஃபிகேஷன் பணிகள் நிறைவடைந்து, நமது மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியல் வந்தால் தான் முழு கிணற்றையும் கடந்ததாக கருத முடியும்.

S.I.R. பணிகள் வாக்குரிமையை பாதுகாக்கும் அடிப்படைப் பணியாக இருந்தால், "என் வாக்குச் சாவடி – வெற்றி வாக்குச்சாவடி" என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பணியாகும்.

எனவே, நாம் அனைவரும் களத்தில் மிகுந்த தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும். உங்கள் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் முன் எவராலும் நிற்க முடியாது. எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழ்நாட்டை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன்தான். உங்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இதை கூறவில்லை. இது தான் உண்மை.

### நமக்கு ஆதரவான நடுநிலை வாக்காளர்கள்!

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 86 லட்சம் மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர். இதில் பயனாளிகளுடன் சேர்த்து, கழகத்தினரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முந்தைய ஆட்சிக்காலங்களில் மழை பெய்தாலே உதவிக்காக காத்திருந்த நிலையும், நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு வழங்கும் முறையும் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை மக்களுக்கு களத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். நமது சிறப்பான பணிகளைப் பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று நமக்கு ஆதரவாக நிற்கின்றனர்.

மொத்தமாக, பயனாளிகள் கழகத்தினர் நடுநிலை வாக்காளர்கள் என சேர்த்தால், இரண்டு கோடியே ஐம்பது லட்சம் வாக்குகளை தாண்டுவது சாத்தியமே.

### நம் எதிரிகளை குறைத்து மதிப்பிடமுடியாது!

கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் நமது கூட்டணி பெற்ற வாக்குகள் 2 கோடியே 9 லட்சம் வாக்குகள் தான். இந்த முறை, அதைவிட கூடுதலாக அதிக வாக்குகளைப் பெறுவது உறுதி. இந்த புள்ளிவிவரங்களை முன்வைத்து, உங்கள் களப்பணியின்மீது உள்ள நம்பிக்கையோடு தெளிவாகக் கூறுகிறேன் - நாம்தான் மீண்டும் ஆட்சியமைக்க உள்ளோம்.

இத்தனை சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி, தேர்தல் ஆணையம் - இவையனைத்தையும் அவர்கள் நமக்கு எதிராக பயன்படுத்துவார்கள்.

தினந்தோறும் ஏராளமான பொய்கள் பரப்புவார்கள், போலியான பிம்பங்களை உருவாக்குவார்கள், ஊடகங்களைப் பயன்படுத்தி பொய்ச் செய்திகளை பரப்புவார்கள்.

### தீயாக உழைக்கும் உடன்பிறப்புகள்!

இவற்றை எதிர்கொள்ள, நமது பலத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கொள்கை தான் நமது பலம். நிர்வாகிகள் தான் நமது பலம். தீயாக உழைக்கும் கழக உடன்பிறப்புகள் தான் நமது பலம். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள கழக கட்டமைப்பு தான் நமது பலம்.

இந்த பலங்களை மிகத் துல்லியமாகப் பயன்படுத்துவதே நமது முக்கியமான வியூகம் ஆக இருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது வாக்குகளை உறுதி செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது கழகத்தினர் உற்சாகத்துடன் செயல்பட வைக்க வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## இண்டிகோ விவகாரத்தில்

# நீதிமன்றம் அவசரமாக தலையிட வேண்டிய அவசியம் இல்லை!

## உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

*புதுடெல்லி, டிச. 9 -*

இண்டிகோ விவகாரத்தில் நீதிமன்றம் அவசரமாக தலையிட வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றிய அரசே கையாளட்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

விமானிகள் பணி நேரம் தொடர்பான புதிய விதிமுறைகள் நவம்பர் 1ம் தேதி முதல் அமலுக்கு வந்த நிலையில், அதற்கேற்ப போதிய விமானிகளை நியமிக்காமலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காமலும் இண்டிகோ நிறுவனம் அலட்சியமாக செயல்பட்டது.

இதன் விளைவாக நாடு முழுவதும் கடந்த 7 நாட்களாக இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையங்களில் தவிக்கும் நிலை ஏற்பட்டது.



குறிப்பாக, திருமணம் மற்றும் குளிர்கால விடுமுறை நாட்களில் ஏற்பட்ட இந்தத் தடையால் பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இதனால் மற்ற விமானங்களிலும் கட்டணங்கள் தாறுமாறாக உயர்ந்தன.

பயணிகளின் பாதிப்பைக் கருத்தில் கொண்டு, இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.610 கோடி கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விமான சேவை பாதிப்புகள் குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் முறையீடு செய்தார். 2500 விமான சேவைகள் முடங்கி உள்ளதாகவும் 95 விமான நிலையங்கள் பாதிப்படைந்துள்ளன என்றும் வழக்கறிஞர் குறிப்பிட்டார்.


இதை கேட்ட உச்சநீதிமன்றம், இண்டிகோ விமான சேவை முடக்கத்தால், பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்துள்ளதாகவும் இது மிக தீவிரமான பிரச்சினை என்றும் தெரிவித்தது.

ஒன்றிய அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதை அறிவதாகவும் ஒன்றிய அரசே அதை கையாளட்டும் என்றும் இண்டிகோ விவகாரத்தில் நீதிமன்றம் அவசரமாக தலையிட வேண்டிய நிலை தற்போது இல்லை என்றும் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு தெரிவித்துள்ளது.

## வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதா ஜியா லண்டன் பயணம்!

டாக்கா, டிச. 9 –

வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதா ஜியா (வயது 80). இவரது உடல் நிலை பாதிக்கப்பட்டதையடுத்து தலைநகர் டாக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



இதற்கிடையே கலிதா ஜியாவை இங்கிலாந்தின் லண்டனுக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்க கடந்த வாரம் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அவர் இன்று ஏர்ஆம்புலன்ஸ் மூலம் லண்டனுக்கு அழைத்து செல்லப்பட உள்ளார்.

இதுதொடர்பாக வங்காளதேச சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, ஏர்ஆம்புலன்ஸ் விமானத்திற்கு இன்று காலை 8 மணிக்கு தரையிறங்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அன்று இரவு 9 மணிக்கு புறப்படும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த விமானம், ஜெர்மனியை தளமாகக் கொண்ட எப்.ஏ.ஐ விமானக் குழுமத்திடமிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பதவிநீக்கம் செய்யக்கோரி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது

# நாடாளுமன்றத்தில் 'இம்பீச்மெண்ட்' தீர்மானம்!

## 'இந்தியா' கூட்டணி நடவடிக்கை!

புதுடெல்லி, டிச. 9 -

உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றதில் 'இம்பீச்மெண்ட்' தீர்மானம் கொண்டுவரும் நடவடிக்கையை தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் தொடங்கி உள்ளன.

ஆண்டுதோறும் கார்த்திகை தீபத் தினத்தன்று திருப்பரங்குன்றம் மலையில் உச்சிப் பிள்ளையார் கோயிலின் தீபத் தூணில் தீபம் ஏற்றப்படும். ஆனால், இந்த ஆண்டு கார்த்திகை தீபம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் ஏற்ற அனுமதிக்குமாறு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்து தமிழர் கட்சியின் ராம ரவிக்குமார் என்பவர் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், கார்த்திகை தீபத் தினத்தன்று திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டார். இதனால், திருப்பரங்குன்றத்தில் தேவையில்லாத சமூகப் பதற்றம் ஏற்படும் சூழல் உருவானது.

நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இந்நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர் சுவாமி நாதனை பதவி நீக்கம் செய்யும் இம்பீச்மெண்ட் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவர திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதன்படி, இம்பீச்மெண்ட் தீர்மானத்தை தாக்கல் செய்வதற்கு தேவையான எம்.பி.க்களின் கையெழுத்தை பெறும் நடவடிக்கையை இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொடங்கி உள்ளனர்.

### பதவி விலகக்கோரி சென்னையில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்!

திருப்பரங்குன்றம் விவகாரத்தில், நீதித்துறை மரபுகளை மீறி தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பதவி விலகக்கோரி, வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தேவையில்லாத சமூகப் பதற்றத்தை ஏற்படுத்தி, சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முயற்சித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் மீது தலைமை நீதிபதி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என பல்வேறு கட்சிகளும், அமைப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நீதித்துறை மரபுகளை மீறி தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனுக்கு எதிராக வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னை உயர்நீதிமன்ற நுழைவாயில் அருகே வழக்கறிஞர்கள் அமைப்பு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டு முழக்கமிட்டனர்.

## ஹைதராபாத்தில் உள்ள முக்கிய சாலைகளுக்கு

# அமெரிக்க அதிபர் டிரம்ப் - ரத்தன் டாடா - கூகுள் பெயர்!

## தெலுங்கானா அரசு முடிவு!

ஹைதராபாத், டிச. 9 –

தெலங்கானாவில் அமெரிக்க தூதரக அலுவலகம் அமைந்துள்ள சாலைக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் பெயர் வைக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், டெல்லியில் நடைபெற்ற USISPF மாநாட்டில் பேசிய தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, ஹைதராபாத்தில் உள்ள முக்கிய சாலைகளுக்கு முன்னணி உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் தலைவர்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, தெலங்கானாவில் அமெரிக்க துணை தூதரகம் அமைந்துள்ள ஹைதராபாத்தின் மிக முக்கிய சாலைக்கு 'டொனால்ட் டிரம்ப் அவென்யூ' என்று பெயர் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் அமெரிக்க தூதரகத்திற்கு தெலங்கானா அரசு கடிதம் எழுதியுள்ளது. மேலும், ஹைதராபாத்தில் ரவிர்யாலாவில் நேரு வெளிவட்டச் சாலையை இணைக்கும் புதிய க்ரீன்பீல்டு சாலைக்கு, மறைந்த தொழிலதிபர் ரத்தன் டாடாவின் பெயர் சூட்டப்பட இருக்கிறது. முன்னதாக ரவிர்யாலா மாற்று சாலைக்கு 'டாடா இண்டர்சேஞ்ச்' என்று பெயர் மாற்றப்பட்டது.

கூகுள் நிறுவனத்தை கவுரவிக்கும் விதமாக, ஹைதராபாத்தின் முக்கிய சாலைக்கு 'கூகுள் தெரு' என்று பெயரிடப்பட இருக்கிறது. அதே போல, மைக்ரோசாப்ட் மற்றும் விப்ரோ நிறுவனங்களின் பெயர்களையும் சாலைகளுக்கு வைப்பது தொடர்பாக தெலங்கானா அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.